2009 பிப்ரவரி 24]

திருமதி பெ. பிரபாவதி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, புதியதாக துவங்கப்பட்டுள்ள திருப்பூர் மாவட்டத்தில் இடம்பெற்ற தொழில் வளம் இல்லாத தாராபுரம் தொகுதியில் ஒரு தொழிற்பேட்டை அமைக்க அரசு ஆவன செய்யுமா என்பதைத் தங்கள்மூலம் அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு ஊரகத் தொழில் மற்றும் கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் அவர்கள்

மாண்புமிகு திரு. பொங்கலூர் நா. பழனிசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஏற்கெனவே நான் முன்பு தெரிவித்தபடி தொழில் துவங்க ஆர்வம் உள்ள 20 நபர்கள் முன்வந்தால், எதிர்காலத்திலே தாராபுரம் பகுதியிலே தொழிற்பேட்டை அமைப்பதற்கான சாத்தியக்கூறுகளை ஆராய்ந்து, தொழிற்பேட்டைகளை துவங்க இந்த அரசு முயற்சிகளை மேற்கொள்ளும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா வரிசை எண் 56, மாண்புமிகு உறுப்பினர் திரு. இரா. மாணிக்கம், மாண்புமிகு வருவாய் மற்றும் வீட்டு வசதித் துறை அமைச்சர் அவர்கள்.

56—

கட்டடம்

***56334—திரு. இரா. மாணிக்கம்:**

மாண்புமிகு வருவாய் மற்றும் வீட்டு வசதித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) குளித்தலை நகரம், வைகநல்லூர் வடக்கு கிராமத்திலுள்ள வருவாய் ஆய்வாளர் குடியிருப்பு அலுவலகத்தைப் புதியதாக கட்ட அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

மாண்புமிகு திரு. இ. பெரியசாமி, வருவாய் மற்றும் வீட்டு வசதித் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ) தமிழகத்தில் 1,120 வருவாய் ஆய்வாளர் அலுவலகங்கள் உள்ளன. அவற்றில் 1,084 வருவாய் ஆய்வாளர்களுக்கு அலுவலகத்துடன் கூடிய குடியிருப்புகள் உள்ளன.

LEGISLATIVE ASSEMBLY TAMIL NADU வாய்மையே வெல்லும் TRUTH ALONE TRIUMPHS

கடந்த ஆண்டு நிதிநிலை அறிக்கையின்படி மூன்று ஆண்டுகளில் ஆண்டுதோறும் ரூ.20 கோடி மதிப்பீட்டில் மாவட்ட ஆட்சியர், மாவட்ட வருவாய் அலுவலர், வருவாய்க் கோட்ட அலுவலர், வருவாய் வட்டாட்சியர், வருவாய் ஆய்வாளர் மற்றும் கிராம நிர்வாக அலுவலர்களுக்கான அலுவலகங்கள் மற்றும் குடியிருப்புகள் கட்ட அரசு கொள்கை முடிவெடுத்துள்ளது. அதன்படி 36 வருவாய் ஆய்வாளர்களுக்கு ரூ.3.17 கோடி செலவில் அலுவலகத்துடன்கூடிய குடியிருப்புக் கட்டடங்கள் கட்டித்தரப்படவுள்ளன. இந்த அரசு ஏற்கெனவே அறிவித்தவாறு, ரூ.45 கோடி மதிப்பீட்டில் வருவாய்த் துறைக்குத் தேவையான அலுவலகங்கள் மற்றும் குடியிருப்புகளைக் கட்டுவதற்கு ஒப்புதல் அளிக்கப்பட்டு பணிகள் நடைபெற்று வருகின்றன. இப்பணிகளுக்கு, வரும் நிதியாண்டில் ரூ.34 கோடி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. இதில், குளித்தலை தொகுதியில் உள்ள வைகநல்லூர் வடக்கு கிராம வருவாய் ஆய்வாளர் குடியிருப்புக் கட்டடம் கட்டித் தர பரிசீலிக்கப்படும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. இரா. மாணிக்கம்.

திரு. இரா. மாணிக்கம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, குளித்தலை தொகுதி, குளித்தலை நகராட்சியில் வைகநல்லூர் வடக்குக் கிராமத்தில் அரசுக்குச் சொந்தமான சுமார் 8 சென்ட் இடத்தில் சுமார் 363 சதுர மீட்டர் பரப்பளவில் கட்டப்பட்டிருந்த வருவாய் ஆய்வாளர் குடியிருப்பு அலுவலகம் முற்றிலும் பழுதடைந்து 20 ஆண்டுகளாக செயல்படாமல் இருக்கின்றது. நகரத்தின் மத்தியில், சுமார் ரூ. 20 இலட்சம் மதிப்புள்ள அரசுக்குச் சொந்தமான இந்த இடத்தைத் தனியார் ஆக்கிரமிப்பு செய்வதற்கு வாய்ப்புகள் இருக்கின்றன. ஆகவே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள், முற்றிலும் சேதம் அடைந்திருக்கின்ற அந்த வருவாய் ஆய்வாளர் குடியிருப்பு அலுவலகத்தை இந்த நிதியாண்டிலேயே கட்டுவதற்கு நிதி ஒதுக்கீடு செய்வாரா எனத் தங்கள் மூலம் அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு வருவாய் மற்றும் வீட்டு வசதித் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. இ. பெரியசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் ஏற்கெனவே விரிவாகப் பதில் சொல்லியிருக்கிறேன். இந்த நிதியாண்டில் அதைப்பற்றி அரசு பரிசீலித்து கட்டித் தரப்படும் என்ற வாக்குறுதியும் தந்திருக்கிறேன்.

2009 பிப்ரவரி 24]

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. இரா. மாணிக்கம்.

முற்பகல் 10-20

திரு. இரா. மாணிக்கம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஆங்கிலேயர் ஆட்சிக் காலத்திலே கட்டப்பட்ட குளித்தலை வட்டாட்சியர் அலுவலகத்தின் பழமையான கட்டடத்தை இடித்துவிட்டு, புதியதாக வட்டாட்சியர் அலுவலகம் கட்டவேண்டும் என்று கடந்த 2007 ஆம் ஆண்டு நான் அமைச்சரிடம் கோரிக்கை வைத்தேன். அமைச்சர் அவர்களும், மாண்புமிகு முதல்வர் கலைஞர் அவர்களை முதன்முதலாகத் தேர்ந்தெடுத்து அனுப்பிய, அந்த குளித்தலைத் தொகுதிக்கு 1 கோடியே 40 இலட்சம் ரூபாய் ஒதுக்கி, அந்த வட்டாட்சியர் அலுவலகத்தைக் கட்டுவதற்கு உத்தரவு பிறப்பித்தார்கள். கடந்த 13-10-2008 அன்று வருகை தந்திருந்த நம்முடைய மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் தளபதி அவர்கள் அந்தக் கட்டடத்தைத் திறந்து வைத்திருக்கின்றார்கள். அதற்காக மாண்புமிகு முதல்வர் அவர்களுக்கும், மாண்புமிகு தளபதி அவர்களுக்கும், மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் அவர்களுக்கும் நன்றி தெரிவித்து, இந்த வருவாய் ஆய்வாளர்கள் குடியிருப்பையும் கட்டுவதற்கு இந்த நிதியாண்டிலேயே நிதி ஒதுக்கவேண்டுமாய் உங்கள்மூலம் கேட்டுக்கொள்ள விரும்புகின்றேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு வருவாய் மற்றும் வீட்டு வசதித் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. இ. பெரியசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஏற்கெனவே நான் தெரிவித்துவிட்டேன், கண்டிப்பாக இந்த ஆண்டு பரிசீலிக்கப்படும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா வரிசை எண் 57, மாண்புமிகு உறுப்பினர் திரு. விடியல் எஸ். சேகர், மாண்புமிகு சுற்றுலா மற்றும் பதிவுத் துறை அமைச்சர் அவர்கள்.

57—

சுற்றுலாப் பேருந்து

***62746—திரு. விடியல் எஸ். சேகர்:**

மாண்புமிகு சுற்றுலா மற்றும் பதிவுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—